# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் அவர்களினால் 2017, ஒகத்து மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, மே மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **200 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 16.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

2-PL 005399-475 (2017/08)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் ''சான்றளிப்பு சேவை வழங்குநர்களுக்கு உரிமமளித்தல் அல்லது அதிகாரமளித்தல்'' மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களின் இலத்திரனியல் தகவல் தொடர்பாடலைப் பயன்படுத்துவது பற்றி ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுத்தல் என்பனவற்றை உள்ளடக்குவதற்கு (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துகின்றது.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது சட்டத்திற்கான இரண்டு புதிய குறிக்கோள்களை உட்புகுத்துவதற்காகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது தகவல் அதனது மூலவடிவத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு அல்லது வைத்திருக்கப்படுவதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்துகின்றவிடத்து சட்டத்தின் ஏற்புடைமை தொடர்பிலான ஏற்பாடுகளைத் திருத்துவதற்குமாகும்.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் ''இலத்திரனியல் கையொப்பங்களின் சட்ட அங்கீகாரம்'' பற்றிய புதிய பிரிவொன்றினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினை மாற்றீடுசெய்கின்றது.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அரசாங்க நிறுவனங்களின் மற்றும் நியதிச்சட்ட குழுக்களில் இலத்திரனியல் பதிவேடுகளின் மற்றும் இலத்திரனியல் கையொப்பங்களின் பயன்பாடு தொடர்பிலான ஏற்பாடுகளை திருத்துவதற்காகும்.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் இலத்திரனியல் வடிவத்திலுள்ள ஏதேனும் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு அல்லது வழங்குவதற்கு அமைச்சு, திணைக்களம் முதலியன பற்றி புதிய பிரிவொன்றால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றது.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம் கொடைமுனைவுகளை ஆக்குவதற்கான கோரிக்கை பற்றி முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 11அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றது.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது இலத்திரனியல் பதிவேடுகளின் அனுப்புகை நேரம் மற்றும் இடம் அத்துடன் பற்றுச்சீட்டு தொடர்பிலான ஏற்பாடுகளை திருத்துவதற்குமாகும்.*

***வாசகம் 10 :*** *இவ்வாசகம் ''இலத்திரனியல் தகவல் தொடர்புகளிலுள்ள பிழை'' பற்றி முதன்மைச் சட்டவாக்கத்தின் 14அ என்னும் ஒரு புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.*

***வாசகம் 11 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது ''தராதர அங்கீகாரம் பெற்ற சான்றளிப்பு சேவை வழங்குநர்கள்'' என்பதனை ''உரிமம்பெற்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சான்றளிப்பு சேவை வழங்குநர்கள் என்பதனால் மாற்றீடு செய்வதற்குமாகும்.*

**வாசகம் 12 :** இவ்வாசகம் "சான்றளிப்பு அதிகாரசபையை முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்கும் என செயலணியை நியமிப்பதற்கான அமைச்சர்" பற்றி முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 18அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.

**வாசகம் 13 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவினை நீக்குகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது சான்றளிப்பு அதிகாரசபையின் தத்துவங்கள் தொடர்பிலான ஏற்பாடுகளைத் திருத்துவதற்குமாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது சான்றளிப்பு சேவை வழங்குநர்களுக்கு உரித்தளித்தல் அல்லது அதிகாரமளித்தல் தொடர்பிலான ஏற்பாடுகளை திருத்துவதற்குமாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமை பற்றிய மட்டுப்பாடுகள் தொடர்பிலான ஏற்பாடுகளைத் திருத்துவதற்குமாகும்.

**வாசகம் 16 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவது தொடர்பிலான ஏற்பாடுகளை திருத்துவதற்குமாகும்

**வாசகம் 17 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது "தன்னியக்க தகவல் முறைமை", "சமவாயம்", "இலத்திரனியல் முகவரி", "இலத்திரனியல் தகவல் தொடர்பாடல்", "இலத்திரனியல் கையொப்பம்", "அமைச்சர்", "மூலகாரன்" மற்றும் "விதித்துரைத்தல்" ஆகிய பதங்களுக்கான புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதற்குமாகும்.

## இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் (திருத்தம்)

*ச.வ.ஒ. 22/2016*

### *2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் விரிவுப் பெயரினைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் விரிவுப் பெயரானது "மற்றும் சான்றளிப்புச் சேவை வழங்குநர்களின் தராதர அங்கீகாரத்திற்கும் ஏற்பாடு செய்வதற்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மற்றும் சான்றளிப்புச் சேவை வழங்குநர்களின் உரிமமளித்தல் மற்றும் அதிகாரமளித்தலுக்கு ஏற்பாடு செய்வதற்கும்; சர்வதேச ஒப்பந்தங்களில் இலத்திரனியல் தகவல் தொடர்புகளைப் பயன்படுத்துதல்மீதான ஐக்கியநாடுகள் சமவாயத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-*

*(1) அதன் (இ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் புதிய பந்திகளினை இடுவதன் மூலம் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-*

*"(இ) ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் விண்ணப் பத்தினை, மனுவினை, பிராதினை, மறுமொழி*

2-PL 005399-475 (2017/05)

யினை, எழுத்திலான சமர்ப்பணங்களை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தினை இலத்திரனியல் முறையில் கோப்பிடுவதற்கு வசதியளித்தலும்;

(இஅ) குறித்த முறையொன்றில் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில், மாகாணசபையில், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களத்தில் அல்லது உள்ளூர் அதிகாரசபையில் அல்லது அரசாங்கத்தினால் அல்லது நியதிச்சட்டக் குழுவினால் சொந்தமான அல்லது அவற்றினால் கட்டுப்படுத்தப்படும் அலுவலகம், குழு அல்லது முகவராண்மையில் ஏதேனும் படிவத்தினை, விண்ணப்பத்தினை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தினை இலத்திரனியல் முறையில் கோப்பிடுதலுக்கு வசதியளித்தலும் அத்துடன் இலத்திரனியல் தகவல் தொடர்புகளின் நம்பத்தகு வடிவங்களின் வழிவகை ஊடாக பகிரங்க சேவையின் வினைத்திறனுடனான வழங்குதலை ஊக்குவித்தலும்;";

(2) அதன் (ஈ) என்னும் பந்தியில் "நம்பிக்கையை ஊக்குவித்தலும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "நம்பிக்கையை ஊக்குவித்தலும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலமும்-

"(உ) சமவாயத்தின் ஏற்புறுதி நேரத்தில் இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைவாக சமவாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துதலும்.".

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, அதன் (1)ஆம் உட்பிரிவில், "தகவல் இலத்திரனியல் வடிவத்தில் கிடைக்கச் செய்யப்பட்ட நேரத்திலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தகவலானது தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது தகவல் தொடர்பு அல்லது வேறு வகையொன்றாக அதனது இறுதி வடிவத்தில் முதலாவதாக பிறப்பாக்கம் செய்யப்பட்ட நேரத்திலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இத்தால் இடப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

"இலத்திரனியல் கையொப்பங்களின் சட்ட அங்கீகாரம்.

7. தகவல் தொடர்பு அல்லது வேறு ஏதேனும் ஆவணம் கையொப்பமிடப்படுதல் வேண்டும் என அல்லது எவரேனும் ஆளின் கையொப்பத்தை கொண்டிருத்தல் வேண்டும் என ஏதேனும் எழுத்திலான சட்டம் ஏற்பாடு செய்கின்றவிடத்து, அப்போது அத்தகைய எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அத் தேவைப்பாடு-

(அ) இலத்திரனியல் தகவல் தொடர்பில் உள்ளடக்கப்பட்ட தகவல் தொடர்பில் அவ்வாளினை இனங்காட்டுவதற்கும் அவ்வாளினது உளக் கருத்தைக் குறித்துக்காட்டுவதற்கும் முறையொன்று பயன்படுத்தப்படுகின்றதெனில்; அத்துடன்

(ஆ) பயன்படுத்தப்பட்ட முறையானது,

(i) ஏதேனும் இயைபான உடன்படிக்கை உட்பட எல்லாச் சூழ்நிலைகளின் நோக்கில், எந்த நோக்கத்திற்காக இலத்திரனியல்

தகவல் தொடர்பு பிறப்பாக்கம் செய்யப்பட்டதோ, அனுப்பப் பட்டதோ அல்லது தொடர்பு படுத்தப்பட்டதோ அந்த நோக் கத்திற்காக தோதானவாறு நம்ப கத்தன்மையானதாக இருக்கின்ற தெனின்; அல்லது

(ii) அதன்மூலமோ அல்லது மேலதிக சான்றுடன் சேர்த்தோ (அ) என் னும் பந்தியில் விதித்துரைக் கப்பட்ட பணிகளை நிறைவேற்றி யுள்ளதாக எண்பிக்கப்படு கின்றதெனின்,

தரவுத்தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத் திரனியல் பதிவேடு அல்லது தகவல் தொடர் பாடல் தொடர்பில் திருப்தி செய்யப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது மேலும் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "வேறு ஏதேனும் சட்டத்தில்" மற்றும் "இலத்திரனியல் பதிவேடுகளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில்" மற்றும் "இலத்திரனியல் பதிவேடுகள், இலத்திரனியல் ஆவணம், தரவுத் தொடர்பு அல்லது ஏதேனும் இலத்திரனியல் தகவல் தொடர்புகளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "உரிமத்தின், அனுமதிப்பத்திரத்தின் அல்லது அங்கீகாரத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"உரிமத்தின், சான்றிதழின், அனுமதிப்பத்திரத்தின் அல்லது வேறு ஏதேனும் அங்கீகாரப்படிவத்தின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (2) ஆம் உட்பிரிவில், "இலத்திரனியல் பதிவேடுகளின் தேவைப்படுத்தும் இயைபான அதிகாரசபை இலத்திரனியல் தகவல் தொடர்புகளின் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாட்டுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தரவுத் தகவல், இலத்திரனியல் பதிவேடு, இலத்திரனியல் ஆவணம் அல்லது இலத்திரனியல் தகவல் தொடர்புகள் என்பவற்றின் பயன்பாட்டுக்கு அத்தகைய தரவுத்தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் தகவல் தொடர்பு அல்லது இலத்திரனியல் பதிவேட்டின் பயன்பாட்டினை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவானது இத்தால் இடப்படுகின்றது:-

*"அமைச்சு, திணைக்களம் முதலியன இலத்திரனியல் வடிவத்தில் ஏதேனும் ஆவணத்தை ஏற்றுக் கொள்ளுதலும் வழங்குதலும்.*

10. அமைச்சு, திணைக்களம், நிறுவனம், பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது அதையொத்த வேறு குழு ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, தரவுத் தகவல், இலத்திரனியல் பதிவேடு, இலத்திரனியல் ஆவணம் அல்லது இலத்திரனியல் வடிவத்திலான வேறு தகவல் தொடர்புகளை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது வழங்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 11அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.*

**8**. பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச்சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"கொடை முனைவைச் செய்வதற்கான அழைப்பு.

11அ. ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட குறித்த திறத்தவர்களுக்கென முகவரியிடப்படாத ஆனால் ஏதேனும் தகவல் முறைமைகளினைப் பயன்படுத்துகின்ற திறத்தவர்களுக்கு பொதுவாக அணுகக்கூடியதான ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இலத்திரனியல் தகவல் தொடர்புகள் ஊடாக செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றை செய்து கொள்வதற்கான முன்மொழிவு ஒன்று, ஏற்பின் விடயத்தில் பிணிக்கப்பட வேண்டிய முன்மொழிவைச் செய்கின்ற திறத்தவரின் உளக்கருத்தைக் தெளிவாகக் குறித்துக் காட்டியிருந்தாலொழிய, கொடைமுனைவைச் செய்வதற்கான அழைப்பு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "மூலகாரரின் கட்டுப்பாட்டிற்கு வெளியேயுள்ள தகவல் முறைமை ஒன்றில் அது பிரவேசிக்கும் பொழுது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூலகாரரின் கட்டுப்பாட்டின் கீழான தகவல் முறைமையொன்றை விட்டுச்செல்லும் பொழுது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன்மூலமும்.

"(2) (அ) மூலகாரனும் முகவரிகாரனும் வேறுவகையாக உடன்பட்டுக்கொண்டாலன்றி, தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம்,இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பாடல் ஒன்று பெறப்பட்ட நேரமானது பின்வருமாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அதாவது-

(i) *முகவரிகாரன் தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பாடலைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக இலத்திரனியல் முகவரி ஒன்றைக் குறித்தொதுக்கியிருப்பின், பெறுகையானது சொல்லப்பட்ட தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பாடல் முகவரிகாரனினால் மீளப் பெறப்பட இயலுமாக வருகின்ற நேரத்தில் இடம்பெறுகின்றது; அல்லது*

(ii) *முகவரிகாரன் தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பாடலைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக இலத்திரனியல் முகவரி ஒன்றைக் குறித்தொதுக்காதிருப்பின் அல்லது வேறொரு இலத்திரனியல் முகவரியை குறித்துக்காட்டியிருப்பின், பெறுகையானது சொல்லப்பட்ட தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தொடர்பாடல் அவ்விலத்திரனியல் முகவரியில் முகவரிகாரரினால் மீளப்பெறப்பட இயலுமாகவிருக்கின்றதும் அத்துடன் முகவரிகாரன் சொல்லப்பட்ட தரவுத்தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பாடல் அவ் இலத்திரனியல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிய வருகின்ற நேரத்தில் இடம்பெறுகின்றது.*

*(ஆ) இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக, தரவுத் தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பு சொல்லப்பட்ட தரவுத் தகவல், இலத்திரனியல்*

ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு தகவல் தொடர்பாடல் முகவரிகாரனுடைய இலத்திரனியல் முகவரியை அடைகின்றபோது, முகவரிகாரரினால் மீளப்பெறப்பட இயலுமாகவிருப்பதாக ஊகிக்கப்படுகின்றது.";

(3) அதன் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியினை இடுவதன் மூலமும்-

"(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக-

(அ) மூலகாரன் அல்லது முகவரிகாரன் ஒரு தொழில் இடத்தை குறித்துக்காட்டாதிருப்பின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலிடத்தைக் கொண்டிருப்பின், அந்த தொழிலிடமானது ஒப்பந்தத்தின் முன்னர் அல்லது ஒப்பந்த முடிவில் மூலகாரனால் அல்லது முகவரிகாரனால் அறியப்படும் அல்லது மனதில் கருதப்படும் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இயைபான ஒப்பந்தத்திற்கு நெருங்கிய தொடர்பை கொண்டுள்ள அவ்விடம் ஆகும்;

(ஆ) மூலகாரர் அல்லது முகவரிகாரர் தொழிலிடமொன்றை கொண்டிருக்கவில்லையாயின், அவரது வழமையான வதிவிடம் தொழிலிடம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) அமைவிடம் ஒன்று பின்வரும் காரணமாக மட்டும் தொழிலிடம் ஒன்றாகாது-

(i) ஒப்பந்தமொன்றை உருவாக்குதல் தொடர்பில் ஒரு குறிப்பிட்ட மூலகாரனால் அல்லது முகவரிகாரனால் பயன்படுத்தப்படும் தகவல் முறைமை ஒன்றை ஆதரிக்கின்ற சாதனம் மற்றும் தொழில்நுட்பம் அவ் குறிப்பிட்ட அமைவிடத்தில் இருக்கின்றது; அல்லது

(ii) தகவல் முறைமையானது, அவ் அமைவிடத்தில் முகவரியாளரினால் அணுகப்படலாம்;

(ஈ) குறித்த நாடொன்றுடன் தொடர்பு பட்ட கள முகவரி அல்லது மின் அஞ்சல் முகவரி ஒன்றின் மூலகாரர் அல்லது முகவரியாளர் பயன்படுத்துகின்றார் என்ற நிகழ்வு சொல்லப்பட்ட மூலகாரர் அல்லது முகவரியாளரினது தொழிலிடம் அந்நாட்டில் அமைந்துள்ளது என்றும் ஊகம் ஒன்றை உருவாக்குவதில்லை.

(உ) வேறொரு திறத்தவர், குறித்துக் காட்டுதலைச் செய்கின்ற திறத்தவர் அவ்விடத்தில் தொழிலிடமொன்றைக் கொண்டிருப்பதில்லை என மெய்ப்பித்தாலொழிய, திறத்தவரொருவரின் தொழிலிடம் அத்திறத்தவரினால் குறித்துக்காட்டப்பட்ட அமைவிடமாக இருப்பதாக ஊகிக்கப்படுகின்றது; அத்துடன்

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று தொடர்பில் "வழமையான வதிவிடம்" என்பது, அது பதிவு செய்யப்பட்டிருக்கும் இடம் என்பதாகும்.".

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 14அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 14அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.*

"இலத்திரனியல் தகவல் தொடர்பாடலிலுள்ள பிழை.

*14அ.* (1) இலத்திரனியல் ஒப்பந்தமொன்றின் உருவாக்கம் அல்லது நிறைவேற்றல் தொடர்பில் இயற்கை ஆள் ஒருவர், வேறொரு திறத்தவரின் தன்னியக்க தகவல் முறைமையுடன் பரிமாற்றப் பட்ட இலத்திரனியல் தகவல் தொடர்பாடலில் உள்ளீட்டுப் பிழையொன்றைச் செய்கின்றவிடத் தும் அத்துடன் அத் தன்னியக்க தகவல் முறைமை அப்பிழையை திருத்துவதற்கான சந்தர்ப்ப மொன்றை அவ்வாளுக்கு வழங்காதவிடத்தும், அவ்வாள் அல்லது அவ்வாள் எந்த திறத்தவர் சார்பில் செயலாற்றியிருந்தாரோ அந்த திறத்தவர் எந்த இலத்திரனியல் தகவல் தொடர்பாடலின் பாகத்தில் உள்ளீட்டுப் பிழை மேற்கொள்ளப்பட்டி ருந்ததோ அந்த இலத்திரனியல் தகவல் தொடர்பாடலின் பாகத்தை மீளப்பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றார்,-

(அ) ஆள் அல்லது அவ்வாள் எந்தத் திறத்த வரின் சார்பில் செயலாற்றி இருந்தாரோ அந்தத் திறத்தவர், அப்பிழையை அறிந்து கொண்ட பின்னர் இயன்றவரை விரைவாக அப்பிழையினை மற்றைய திறத்தவருக்கு அறிவித்திருப்பின் அத்து டன் அவர் இலத்திரனியல் தகவல் தொடர்பாடலில் பிழையை செய்துள்ளார் என சுட்டிக்காட்டியிருப்பின்; அத்துடன்

(ஆ) ஆள் அல்லது அவ் ஆள் எந்த திறத்தவ ரின் சார்பில் செயலாற்றியிருந்தாரோ அந்தத் திறத்தவர் மற்றைய திறத்தவரிட மிருந்து பெறப்பட்ட பண்டங்கள் சேவை

கள் எவையேனுமிருப்பின் அவற்றிலிருந் தான ஏதேனும் முக்கியமான நன்மை அல்லது பெறுமதியை பயன்படுத்தா திருப்பின் அல்லது பெற்றுக்கொள்ளா திருப்பின்.

(2) இப்பிரிவிலுள்ள எதுவும், (1) ஆம் உட்பிரி வின் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஏதேனும் பிழையின் விளைவுகளை ஆளக்கூடியதாக ஏதே னும் சட்டவிதியின் ஏற்புடைமையை பாதித்த லாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "இப்பாகத்தின்" அத்துடன் "தராதர அங்கீகாரம்பெற்ற சான்றளிக்கும் சேவை வழங்குநர் களால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "இச்சட்டத் தின்" அத்துடன் "உரிமம்பெற்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சான்றளிப்புச் சேவை வழங்குநர்களால்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 18அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினை உடன டுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்-

*"அமைச்சர் செயலணியை நியமித்தல்.*

18அ. அமைச்சர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரைமீது, அதனது முறை யான நிருவாகத்தை உறுதிப்படுத்தும் குறிக்கோளு டன் இயைபான அக்கறைகொண்டுள்ளோரின் தகைமைகளையும் அனுபவத்தையும் அத்துடன் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு, சான்றளிப்பு அதிகாரசபையை முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்குமென செயலணி ஒன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது -

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "தராதர அங்கீகாரம் பெற்ற சான்றளிக்கும் சேவை வழங்குநர்களுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சான்றளிப்புச் சேவை வழங்குநர்களுக்கான உரிமமளித்தல் அல்லது அதிகாரமளித்தலுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலமும்:-

"(ஆ) மேன்முறையீடுகளை கேட்டலும் மற்றும் இச் சட்டத்தின் நோக்கங்களுக்கென உரிமமளித்தல் அல்லது அதிகாரமளித்தலில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகளை குறித்துரைத் தலும்;

(இ) விடயத்துக்கேற்ப, 20 ஆம் பிரிவின்கீழ் உரிமத்தை அல்லது அதிகாரமளித்தலை அளிக்க அல்லது புதுப்பிக்க மறுக்கும்பட்சத்தில், மேன்முறையீடு களை கேட்பதற்கான நடவடிக்கைமுறையைக் குறித்துரைத்தல்;"; அத்துடன்

(3) அதன் (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈஅ) சரிபார்க்கும் நோக்கத்திற்காக உயிரியளவையியல் சார் தரவு மற்றும் வேறு மெய்யென்று சரிபார்க்கும் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுக்கான தொழில்பாட்டு கட்டுக்கோப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைமுறை உட்பட விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைகல் மற்றும் வழிகாட்டு

நெறிகளுக்கிணங்க இலத்திரனியல் ஒப்பங்களின் பல்வேறு வகைகளை வழங்குவதற்கு சான்றளிப்புச் சேவை வழங்குநர்களுக்கு அதிகாரமளித்தல்;".

முதன்மைச் சட்டவாக்கதின் 20 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவினை இடுவதன்மூலமும்-

"(1) சான்றளிப்புச் சேவை வழங்குநர் ஒருவருக்கு சான்றளிப்பு அதிகார சபையினால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்பட்ட கட்டளைக்கல்லுக்கு இணங்க உரிமமளிக்கப்படலாம் அல்லது அதிகாரமளிக்கப்படலாம்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "தராதர அங்கீகாரம் பெறாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமம் அல்லது அதிகாரம் பெறாமல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(3) அதன் (3) உட்பிரிவினை நீக்குவதன்மூலமும்; அத்துடன்

(4) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன்மூலமும்-

"சான்றளிப்புச் சேவை வழங்குநர்களுக்கு உரிமமளித்தல் அல்லது அதிகாரமளித்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது-

(1) அதன் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலமும்-

“(இஅ) பின்வரும் தன்மையிலான ஏதேனும் நிதிசார் விடயம்-

(i) ஒழுங்குபடுத்தப்பட்ட செலாவணி மீதான கொடுக்கல் வாங்கல்கள்;

(ii) வெளிநாட்டுச் செலாவணி மீதான கொடுக்கல் வாங்கல்கள்;

(iii) பிணையங்கள் அல்லது வேறு நிதிசார் சொத்துக்கள் அல்லது சாதனங்கள் தொடர்பான வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைமைகள், வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு உடன்படிக்கைகள் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள்; அத்துடன்

(iv) விற்பனையிலுள்ள பிணைய உரிமைகளின் கைமாற்றம் அல்லது பிணையங்களை மீள்கொள்வனவு செய்வதற்கான கடன் அல்லது பிணையங்களை வைத்திருத்தல் அல்லது பிணையங்களை மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை அல்லது இடைவருநரொருவரால் வைத்திருக்கப்படும் வேறு நிதிசார் சொத்துக்கள் அல்லது சாதனங்கள்;”;

(2) அதன் (உ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்-

“(உ) அமைப்புவழி, உட்கிடையான மற்றும் விளைவுறு நம்பிக்கைப்பொறுப்பு நீங்கலாக

(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச்சட்டத்தில் வரையறுக் கப்பட்டதான ஒரு நம்பிக்கைப்பொறுப்பு;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "(2) ஆம் உட்பிரிவில்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "2 ஆம் பிரிவில்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தி யினை இடுவதன்மூலமும்-

"(இ) பிரிவு 18அ என்பதன் நியதிகளின்படி சான்றளிப்பு அதிகாரசபையை முகாமைசெய் வதற்கும் நிருவகிப்பதற்கும் நியமிக்கப்படும் செயலணியின் அல்லது ஆட்கள் குழுவின் தத்துவங்களும், கடமைகளும் அத்துடன் பணிக ளும் அத்துடன் அவர்களுக்கு ஏற்புடையதற்பாலதான வேறு நியதிகளும் நிபந்தனை களும்;";

(3) அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சான்றளிக்கும் சேவை வழங்குநர்களின் தராதர அங்கீகாரத்திற்கான மூலப்பிரமாணம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபதாம் பிரிவின்கீழ் சான்றளிக்கும் சேவை வழங்குநர்களின் உரிமமளிப் பதற்கான அல்லது அதிகாரமளிப்பதற்கான கட்டளைக் கல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்";

(4) அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்து வதன்மூலம்-

"(ஈஅ) சரிபார்க்கும் நோக்கங்களுக்காக உயிரியளவை யியல்சார் தரவு மற்றும் வேறு மெய்யென்று உறுதிப்படுத்தும் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுக்கான செயற்பாட்டு கட்டுக் கோப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைமுறை கள் என்பன உட்பட இலத்திரனியல் ஒப்பங் களின் பல்வேறு வகைகளை வழங்குவதற் கென சான்றளிப்புச் சேவை வழங்குநர்களிற் கான கட்டளைக்கல் மற்றும் வழிகாட்டுநெறி களை விதித்துரைத்தல்;"; அத்துடன்

(5) அதன் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "தராதர அங்கீகார சான்றிதழை" என்னும் சொற்களுக் குப் பதிலாக, "உரிமத்தை அல்லது அதிகாரமளித் தலை" என்னும் சொற்களை இடுவதன்மூலம்".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது- முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) "முகவரிகாரன்" என்றும் பதத்திற்கான சொல்ல மைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன்மூல மும்-

" "தன்னியக்க தகவல் முறைமை" என்பது, முறைமை யொன்றினால் செயற்பாடு தொடங்கப்படு கின்ற அல்லது பதில் தோற்றுவிக்கப்படு கின்ற ஒவ்வொரு நேரத்திலும் இயற்கை ஆள் ஒருவரினாலான மீளாய்வு அல்லது இடையீடு இன்றி, முழுஅளவில் அல்லது பாகமொன் றில் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அல்லது

தரவுத் தகவல் அல்லது செயல்நிறைவேற்றத் திற்கு பதிலளிப்பதற்கு பயன்படும் கணினி நிகழ்ச்சித் திட்டம் அல்லது இலத்திரனியல் அல்லது வேறு தன்னியக்க வழிவகைகள் எனப்பொருளாகும்;";

(2) "கணினி" என்னும் பதத்திற்கான சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன்மூலமும்-

" "சமவாயம்" என்பது ஏற்புறுதி செய்யும் நேரத்தில் செய்யப்பட்ட பிரகடனத்திற்கு அமைய 2015ஆம் ஆண்டு யூலை 7 ஆந் தேதியன்று இலங்கையினால் ஏற்புறுதி செய்யப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களில் இலத்திரனியல் தகவல் தொடர்பாடலைப் பயன்படுத்துவது பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் எனப் பொருள்படும்;";

(3) "இலத்திரனியல்" என்னும் பதத்திற்கான சொல்ல மைப்பின் வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்து வதன்மூலமும்-

" "இலத்திரனியல் முகவரி" என்பது, தரவுத்தகவல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது ஏதேனும் தகவல் தொடர்பாடல் ஒன்றைப் பெறுவதற்கு ஆளொருவர் பயன்படுத்துகின்ற தகவல் முறைமையொன்றின் தகவல் தொடர்பாடல் வலையமைப்பு ஒன்று அல்லது இலத்திரனியல் அஞ்சல் பெட்டி, தொலைப்பிரதி கருவி அல்லது குறித்துக்காட்டப்பட்ட பாகம் அல்லது அமைவிடம் எனப்பொருளாகும்;

“இலத்திரனியல் தகவல் தொடர்பு” என்பது தரவுத் தகவல் என்னும் வழிமூலம் மேற்கொள்ளப் பட்ட ஏதேனும் தகவல் தொடர்பு எனப்பொரு ளாகும்;”;

(4) “இலத்திரனியல் கையொப்பம்” என்னும் பதத்திற்கான சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய வரைவிலக் கணத்தினை இடுவதன்மூலமும்-

“ “இலத்திரனியல் கையொப்பம்” என்பது தரவுத்தக வல், இலத்திரனியல் ஆவணம், இலத்திரனி யல் பதிவேடு அல்லது தகவல் தொடர்பாடல் தொடர்பில் கையொப்பமிடுநரை இனங்காண் பதற்கும் அத்துடன் அதன்கண் அடங்கியுள்ள தகவல் தொடர்பில் கையொப்பமிடுநருடைய உளக்கருத்தை குறித்துக்காட்டுவதற்கும் பயன் படுத்தக் கூடியதான தரவுத் தகவலுடன், இலத்திரனியல் ஆவணத்துடன், இலத்திரனி யல் பதிவேட்டுடன் அல்லது தகவல் தொடர்பாடலுடன் பொறிக்கப்பட்ட அல்லது தர்க்கரீதியாக இணைக்கப்பட்ட இலத்திரனியல் வடிவத்திலான தரவு எனப்பொருள்படும்;”;

(5) “இடைவருநர்” என்னும் பதத்திற்கான சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன்மூல மும்-

“ “அமைச்சர்” என்பது எவ் அமைச்சருக்கு 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்களின் ஏற்பாடுகள் குறித் தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் எனப் பொருளாகும்;”;

(6) “மூலகாரன்” என்னும் பதத்திற்கான சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை நீக்கிவிட்டு, அதற்குப் பதி

லாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்-

" "இலத்திரனியல் தகவல் தொடர்பின் மூலகாரன்" என்பது எவ்வாளினால் அல்லது எவ்வாள் சார்பில் இலத்திரனியல் தகவல் தொடர்பு ஆனது களஞ்சியப்படுத்தல் ஏதேனுமிருப்பின், அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளதோ அல்லது தோற்றுவிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் எனப் பொருள்படும் ஆனால், இது அவ் இலத்திரனியல் தகவல் தொடர்பில் இடைவரு நராக செயலாற்றுகின்ற ஆளொருவரை உள்ளடக்காது;

"விதித்துரைத்தல்" என்பது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதிகள்மூலம் விதித்துரைத்தல் எனப்பொருள்படும்;"; அத்துடன்

(7) "பாதுகாப்பு நடவடிக்கைமுறை" என்னும் பதத்திற் கான சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "வழங் கப்பட்ட சான்றிதழொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கப்பட்ட உரிமம் அல்லது அதிகார மளித்தலொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூல மும்.

**18.** இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்